(3) அறிவிப்புகள் — தொடர்ச்சி.

(இ) நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(6) அரசினர் சட்ட முன்வடிவு.

நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன். ''தமிழ்நாடு, 1979ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 2.11.1979 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

173. தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு பீடி, சிகரட் தொழிலாளர்கள் (வேலை நிபந்தனைகள்) விதிகளில் சில மாற்றங்கள் செய்வது குறித்து தொழிலாளர் வேலை வாய்ப்புத் துறையின் 4-7-1979—ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண் 1097-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1966—ஆம் ஆண்டு பீடி. சிகரட் தொழிலாளர்கள் (வேலை நிபந்தனைகள்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 32/1966) 44 (4)வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).